செய்தி வெளியீடு எண்:153 நாள்:23.02.2021

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் சீரிய தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட மாண்புமிகு அம்மா அரசின் – ''நாடு போற்றும் நான்காண்டு சாதனைகள்'' என்ற சாதனை மலர்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகளின் தொகுப்பு ஆகியவற்றை தலைமைச் செயலகத்தில் இன்று (23.2.2021) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, கடந்த நான்காண்டுகளில் 50 ஆண்டுகால காவேரி நதிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு, விவசாயிகளின் துயர் துடைக்க பயிர் கடன் தள்ளுபடி, காவேரி – தெற்கு வெள்ளாறு – வைகை குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியது, காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்தது, நீர் நிலைகளை பாதுகாக்க குடிமராமத்துத் திட்டம், நிர்வாக வசதிக்காக 6 புதிய மாவட்டங்களை உருவாக்கியது, 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவம் பயில 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு, 2019 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் 3 லட்சத்து 500 கோடி ரூபாய் மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் மூலம் 8,835 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்ப்பு, கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலும் சிறப்பான செயல்பாடுகளினால்

101 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 88,727 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்தது, பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.2,500 ரொக்கம், விவசாயிகளின் நலனுக்காக காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க ''நடந்தாய் வாழி காவேரி திட்டம்'', சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதியில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா, மகளிர் பாதுகாப்பிற்காக ''காவலன் செயலி'', முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக், 7 புதிய சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு தொழில் கொள்கை–2021 வெளியிட்டது, இணைய வழி வகுப்புகளில் கல்வி கற்க கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா 2GB தரவு அட்டைகள் என எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை பல்வேறு துறைகளின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு மேற்கொண்ட எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனுக்கான தரவரிசையில் தமிழ்நாடு முதலிடம், தொடர்ந்து 5 முறை கிருஷி கர்மான் விருது பெற்றது, டிஜிட்டல் இந்தியா – 2020 தங்க விருது, உடல் உறுப்பு தானத்தில் 6 முறை தேசிய விருது, ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக பல்வேறு விருதுகள், இணைய வழி கற்றலில் முன்னோடி மாநிலத்திற்கான தேசிய விருது, மூத்த குடிமக்கள் சேவைக்காக தேசிய விருது என பல்வேறு விருதுகளையும், அங்கீகாரங்களையும் தமிழ்நாடு அரசு பெற்று தொடர்ந்து முன்னேறி வருகிறது.

''எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், இந்த ஆட்சியும் இயக்கமும் மக்களுக்காகவே பணியாற்றும்'' – என்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வாக்கினை நிறைவேற்றும் வகையில், பரந்த பாரதத்தில் தன்னிகரற்ற மாநிலமாய், வெற்றி நடைபோடும் தமிழகம் மென்மேலும்

தழைத்திட அர்ப்பணிப்போடு நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட மாண்புமிகு அம்மா அரசின் – “நாடு போற்றும் நான்காண்டு சாதனைகள்” என்ற நான்காண்டு சாதனை மலர்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு 1 & 2 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் கே. ராஜு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகளின் தொகுப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் கே. ராஜு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**